## சுருக்கம்

பணியமைப்பு – பொதுப்பணித்துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி– கருணை அடிப்படையில் பணி நியமனம் – திருமதி கோ.காயத்ரி, த/பெ. காலஞ்சென்ற அரசு ஊழியர் திரு கே.கோவிந்தசாமி– இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016–ன் பிரிவுகள் 15 மற்றும் 28(2) ஆகியவற்றினைத் தளர்வு செய்து பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொதுப்பணி (பி1) துறை

அரசாணை (3டி) எண்.84

நாள் : 03.11.2020
சார்வரி, ஐப்பசி 18,
திருவள்ளுவர் ஆண்டு 2051.

படிக்கப்பட்டன:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த(எம்)த் துறை, நாள் 01.08.2018.
2. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, கோயம்புத்தூர் மண்டலம், கோயம்புத்தூர் கடிதம் எண். ஆட்சி 1(2)/7665/2019, நாள் 26.09.2019.
3. அரசாணை (நிலை) எண். 18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1)துறை, நாள் 23.01.2020.

----

**ஆணை:–**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பொதுப்பணித் துறையைச் சார்ந்த திட்ட மற்றும் வடிவமைப்பு உபகோட்டம், பழனி அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து வந்த திரு கே.கோவிந்தசாமி அவர்கள் அரசுப் பணியிலிருக்கும் போது 30.04.2010 அன்று காலமானதைத் தொடர்ந்து, அவரது வாரிசுதாரர்/ மகள் திருமதி கோ.காயத்ரி என்பவருக்கு முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை அவர்களால் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டு, அவர் 06.12.2018 முற்பகல் முதல் அப்பதவியில் பணிபுரிந்து வருகிறார் என்றும், மெட்ரிக்குலேசன் தேர்வில் மார்ச் 2003–இல் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், தனியர் இளநிலை உதவியாளர் பதவிக்கான உரிய கல்வித்தகுதி மற்றும் வயதுத் தகுதியினைப் பெற்றுள்ளார் என்றும் தெரிவித்து, தனியரின் பணியினை வரன்முறை செய்வதற்குத் தேவையான அனைத்து அசல் சான்றிதழ்கள்/ சான்றாவணங்களை அனுப்பி வைத்து, தனியரின் பணியினை அவர் அப்பணியில் சேர்ந்த நாளான 06.12.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, கோயம்புத்தூர் மண்டலம் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, கோயம்புத்தூர் மண்டலம், கோயம்புத்தூர் அவர்களின் கருத்துரு நன்கு ஆய்வு செய்யப்பட்டது. திரு.கே.கோவிந்தசாமி, அலுவலக உதவியாளர் அரசுப் பணியிலிருக்கும் போது 30.04.2010 அன்று காலமாகியுள்ளார். அரசு ஊழியர் இறந்த மூன்று ஆண்டுகளுக்குள் அவரது வாரிசுதாரர்/ மகளாகிய திருமதி கோ.காயத்ரி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி அளிக்க வேண்டி 06.12.2010 அன்று விண்ணப்பம் அளித்துள்ளார். திருமதி கோ.காயத்ரி என்பவரின் பிறந்த தேதி 06.12.1987 ஆகும். தனியர் மெட்ரிக்குலேசன் தேர்வில் மார்ச் 2003–இல் தேர்ச்சி பெற்றுள்ளார். திரு.கே.கோவிந்தசாமி இறந்த போது தனியரின் வயது 22 ஆண்டுகள் மற்றும் 04 மாதங்கள் மாதங்கள் ஆகும். தனியரின் விண்ணப்பம் ஏற்கப்பட்டு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளர் பணி வழங்கப்பட்டுள்ளது. இளநிலை உதவியாளராக பதவியில் சேரும் போது அவரது வயது 31 ஆகும். அவர் அப்பதவிக்குண்டான கல்வி

மற்றும் வயதுத் தகுதிகளைப் பெற்றுள்ளார். மேலும், தனியருக்கு பணி நியமன நாளுக்கு முன்னரே திருமணமாகியுள்ளது. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020–ன்படி இறந்த அரசுப் பணியாளரின் திருமணமான பெண் வாரிசுதாரர்களுக்கும் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதற்கேற்ப தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 15–ல் திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, இந்நேர்வில் குறிப்பிடப்படும் திருமணமான பெண் வாரிசுதாரருக்கு வழங்கப்பட்ட பணி நியமனத்தை வரன்முறை செய்ய மேற்காணும் சட்டப்பிரிவினைத் தளர்வு செய்யும் நிலை எழும். ஏற்கெனவே திருமணமாகியுள்ள நிலையில் தனியருக்கு பணி நியமனம் வழங்கியுள்ள செயல் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 15–க்கு முரணானதாகும். எனவே, தனியரின் பணியினை வரன்முறை செய்திட மேற்காண் சட்டப் பிரிவிற்குத் தளர்வு அளிக்க வேண்டியுள்ளது.

3. மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவரின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்படுவதாக ஆணையிடப்பட்டுள்ளது.

4. இந்நிலையில், திருமதி கோ.காயத்ரி என்பவருக்கு திருமணமான பின்னர் பொதுப்பணித் துறையில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளதால், தனியரின் பணியினை அவர் அப்பணியில் சேர்ந்த நாளான 06.12.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்யவும், பணிநியமன நாளிலிருந்து முன்தேதியிட்டு பணப்பலன்கள் அளிக்கவும் ஏதுவாக, தனியர் பொருட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள் சட்டம்), 2016 பிரிவுகள் 15 மற்றும் 28(2) ஆகியவற்றினை மேற்காண் சட்டத்தின் பிரிவு 58–இன்கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினைப் பயன்படுத்தித் தளர்வு செய்யலாம் என முடிவு செய்து, அவ்வாறே இதன் மூலம் அரசு ஆணையிடுகிறது. மேலும், கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பொதுப்பணித் துறையில் இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டுள்ள திருமதி கோ.காயத்ரி என்பவரின் பணியினை அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் 06.12.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அ.சா.எண்.16223/ ட்டி.1/2020, நாள் 27.10.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, அ.சா.எண் 27865/ஜி1/2020-1, நாள் 29.10.2020–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

க.மணிவாசன்

**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்

தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, கோயம்புத்தூர் மண்டலம், கோயம்புத்தூர்–1.

திருமதி கோ.காயத்ரி, இளநிலை உதவியாளர், (தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, கோயம்புத்தூர் மண்டலம், கோயம்புத்தூர்–1 வழியாக)

முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, சென்னை–9.

மாநில கணக்காயர், சென்னை–18.

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை/

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, சென்னை–9.

இகோ/உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/